**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். ப. முரளி அர்த்தனாரி Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 28.5.2019

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழக மாணவ மாணவியர் வெள்ளமடை கிராமத்தில் நடத்தும் நாட்டுநலப்பணித்திட்ட சிறப்பு முகாம்

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் பயின்று வரும் இரண்டாம் ஆண்டு மாணவ மாணவியர் (122மாணவர்கள் மற்றும் 250மாணவியர்) கோவை மாவட்டம், அன்னூர் பஞ்சாயத்துக்குட்பட்ட நான்கு கிராமங்களான, வெள்ளமடை, காளிபாளையம், தொட்டிபாளையம், சாமநாயக்கன்பாளையம் ஆகியவற்றைத் தேர்வு செய்து நாட்டு நலப்பணித்திட்டத்தின் கீழ் கிராம மக்களுக்கு சேவைசெய்து வருகின்றனர்.

அந்த வகையில், இரண்டாம் வருடமாக, நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாம், வெள்ளமடை கிராமத்தில், 27.05.2019 முதல் 02.06.2019 வரை நடக்க உள்ளது. சிறப்பு முகாமின் துவக்க விழா, நேற்று (27.05.2019) நடைபெற்றது. இரா. ஜனனி, இரண்டாமாண்டுநாட்டுநலப்பணித்திட்டமாணவி, வரவேற்புரைவழங்கினார். முனைவர். மூ. ரா. பாக்கியவதி நாட்டு நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளர், நாட்டு நலப்பணித்திட்டத்தைப் பற்றியும், அதன் பயன்களையும் விரிவாக எடுத்துரைத்தார். மேலும் நாட்டு நலப்பணித் திட்ட சேவைப் பணிகளின் மூலம் கிராமங்களில் ஏற்படும் வளர்ச்சியையும் தாக்கத்தையும் தேர்வு செய்த மூன்றாண்டுகளுக்குப் பிறகு அறிய வேண்டும் என்ற வேண்டுகோளையும் விடுத்தார்.

திரு. கருப்பசாமி, திரு. பாலசுந்தரம், திரு. சுந்தரமூர்த்தி, திரு. எல்.மோகன் கார்த்திக், திரு.விஜயகுமார் ஆகியோர் நாட்டு நலப்பணித்திட்டத்தை வெள்ளமடை பஞ்சாயத்தில் நடத்துவதற்கு நன்றி தெரிவித்தனர். முனைவர்.மா.கல்யாணசுந்தரம்,

முதன்மையர், வேளாண்மை, முனைவர். பா. ஸ்ரீதர், முதன்மையர், வேளாண் பொறியியல், முதன்மையர், மாணவர் நலம் ஆகியோர் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்தனர்.

முனைவர். அ.சு. கிருட்டிணமூர்த்தி, பதிவாளர், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், கோவை அவர்கள் தனது தலைமையுரையில் நாட்டு நலப்பணித்திட்ட சிறப்பு முகாமில் நலப்பணித்திட்ட ஒருங்கிணைப்பாளராக பணியாற்றிய பொழுது அவர் பெற்ற அனுபவங்களைக் கூறினார். மேலும் மாணவர்களிடம் உழவுத் தொழிலின் சிறப்பினைக் கூறி உழவர் சமுதாயத்தினருடன் தொடர்பு ஏற்படுத்திக் கொள்ளுமாறு அறிவுறுத்தினார்.

திரு. ராகுல், இரண்டாமாண்டு நாட்டு நலப்பணித்திட்ட மாணவர் நன்றி நவில விழா இனிதே நிறைவு பெற்றது.

மக்கள் தொடர்பு அலுவலர்